


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 42 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 04 – வெள்ளிக்கிழமை 20 செப்டம்பர் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 42: Thiruvalluvar Year - 2055 - Purataasi 04 - Friday 20 September 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# காஞ்சியில் செப். 28ல் தி.மு.க. பவள விழா பொதுக்கூட்டம்!

## கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கின்றனர்!

**சென்னை, செப்.20-**

**காஞ்சிபுரத்தில் வருகிற செப்டம்பர் 28ஆம் தேதி நடைபெறும் கழக பவள விழா பொதுக்கூட்டத்தில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்தில் கழகக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர் என தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.**

தி.மு.கழக பவள விழாவையொட்டி காஞ்சிபுரத்தில் தி.மு.க கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் பவளவிழா மாபெரும் பொதுக்கூட்டம் வருகிற 28ஆம் தேதி நடைபெறும் என்று தி.மு.க தலைமைக் கழகம் நேற்று முன்தினம் (18.9.2024) அறிவித்துள்ளது.

தி.மு.க. பவளவிழா - கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் 28.9.2024 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.



கூட்டத்திற்கு கழக பொதுச்செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையேற்கிறார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி,

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை,

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன்,

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன்,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன்,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன்,

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன்,

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா,

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன்,

தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன்,

மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜி.எம்.ஸ்ரீதர் வாண்டையார்,

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் கட்சித் தலைவர் பொன்.குமார்,

சமத்துவ மக்கள் கழகத்தின் நிறுவனர் எர்ணாவூர் நாராயணன்,

மக்கள் விடுதலை கட்சித் தலைவர் முருகவேல் ராஜன்,

மனிதநேய ஜனநாயக கட்சித் தலைவர் தமீமுன் அன்சாரி,

முக்குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸ்,

ஆதித் தமிழர் பேரவை தலைவர் அதியமான்

தமிழ் மாநில தேசிய லீக் தலைவர் திருப்பூர் அல்தாப்,




பார்வர்டு பிளாக் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் நன்றி கூறுகிறார்.

---

### நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு பெருகுவது பலரை மிரளச் செய்துள்ளது

## ராகுல் காந்திக்கு பாதுகாப்பை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும்!

### பா.ஜ.க. - ஷிண்டே சேனாவின் அச்சுறுத்தலுக்கு கண்டனம் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, செப்.20-**

**“எனது சகோதரர் ராகுல் காந்திக்கு மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் வெகுவாக பெருகுவது பலரை மிரளச் செய்துள்ளது. எனவே எனது சகோதரர் ராகுல் காந்திக்கு ஒன்றிய அரசு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்” என்று பா.ஜ.க. ஷிண்டே சேனா கட்சியினரின் அச்சுறுத்தலுக்கு கண்டனம் தெரிவித்து சமூக வலை தளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.09.2024) வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

பா.ஜ.க. தலைவர் ஒருவர் “ராகுல் காந்தி அவர்களின் பாட்டிக்கு நேர்ந்த கதிதான் அவருக்கும் நேரும்” எனவும், ஷிண்டே சேனாவின் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் “ராகுல் காந்தி அவர்களின் நாக்கை அறுப்பவருக்குப் பரிசு” எனவும், இன்ன பிற வகைகளிலும் மிரட்டல் விடுத்திருப்பதாக ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்திகள் மிகவும் அதிர்ச்சியளிக்கின்றன.

எனது சகோதரர் ராகுல் காந்தி அவர்களை நோக்கி மக்கள் ஈர்க்கப்படுவதும், நாளுக்கு நாள்



அவருக்குக் கூடி வரும் பொதுமக்களின் ஆதரவும் பலரையும் மிரளச் செய்துள்ளதன் தொடர்ச்சியாகவே இத்தகைய அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அச்சுறுத்தலுக்கும் வன்முறைக்கும் நமது மக்களாட்சியில் இடமில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## மோடி ஆட்சியால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எந்தப் பயனும் இல்லை!

### காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப்.20-

மூன்றாம் முறையாக பிரதமர் பதவியேற்றுள்ள மோடியின் முதல் 100 நாள் ஆட்சி நாட்டுக்கு மிக கடினமான நாட்களாக இருந்தன என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.



3 ஆம் முறையாக பிரதமர் பதவியேற்றுள்ள மோடியின் ஆட்சி 100 நாட்களை நிறைவு செய்துள்ளது. இந்நிலையில், மோடியின் ஆட்சியில் நாடு இன்னல்களை மட்டுமே சந்தித்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள சமூகவலைத்தள பதிவில், மோடியின் 100 நாள் ஆட்சி நாட்டுக்கு மிக கடினமான நாட்களாக இருந்தன என்று விமர்சித்துள்ளார்.

மக்கள் நலனுக்கான எந்த திட்டமும் இல்லை, எந்த பொறுப்பும் இல்லை, ஒரே பசப்பு வார்த்தைகள், அந்தர் பல்டிகள் என மோடி அரசு நாட்டையும், நாட்டு மக்களையும் ஏமாற்றி வருவதாக அவர் சாடியுள்ளார்.

இந்த மோசடியாளர்களிடம் சிக்கி நாடு சோர்வடைந்துள்ளதாக மல்லிகார்ஜுன கார்கே கவலை தெரிவித்துள்ளார். மோடி ஆட்சியால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எந்த பயனும் இல்லை என்று தெரிவித்துள்ள அவர், இனியும் மோடி ஆட்சியை மக்களால் சகித்துக் கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மோடியின் 100 நாள் ஆட்சி நாட்டுக்கு மிக கடினமான நாட்களாகவே இருந்தன மக்கள் நலனுக்கான எந்த திட்டமும் இல்லை, எந்தப் பொறுப்பும் இல்லை, ஒரே பசப்பு வார்த்தைகள், அந்தர் பல்டிகள் மோடி அரசு நாட்டையும், நாட்டு மக்களையும் ஏமாற்றி வருகிறது.

இந்த மோசடியாளர்களிடம் சிக்கி நாடு சோர்வடைந்துள்ளது.

இவ்வாறு மல்லிகார்ஜுன கார்கே கவலை தெரிவித்துள்ளார்.

---

## ஜம்மு காஷ்மீர் தேர்தல் - விறுவிறுப்பான வாக்குப்பதிவு!

ஜம்மு, செப். 20 -

பத்து ஆண்டுகளுக்கு பிறகு ஜம்மு காஷ்மீரில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்று வருகிறது. இதன் முதல்கட்ட வாக்குப்பதிவு 24 தொகுதிகளில் நேற்று முன்தினம் (செப்.18) காலை 7 மணி தொடங்கி விறுவிறுப்பான வாக்குப் பதிவு நடைபெற்றது.

முதல்கட்ட வாக்குப்பதிவில் சுமார் 23.27 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். காலை வாக்குப்பதிவு தொடங்கியது முதலே வாக்காளர்கள் ஆர்வத்துடன் வரிசையில் நின்று தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றினர். கடுமையான குளிர் நிலவி வரும் சூழலிலும் எவ்வித சர்ச்சையும், பிரச்சினையும் இல்லாமல் அமைதியாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

தேர்தல் ஆணையத்தின் தகவல்படி, கிஷ்த்வாரில் 56.86%, தோடாவில் 50.81%, ராம்பனில் 49.68%, சோபியானில் 38.72%, குல்ஹாமில் 39.91%, ஆனந்த்நாக்கில் 37.90% மற்றும் புல்வாமாவில் 29.84% வாக்குகள் பதிவாகியுள்ளன. காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வரும் வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது.

**60% வாக்குப்பதிவு எதிர்பார்ப்பு:**

இதனிடையே ஜம்மு காஷ்மீரில் அமைதியான முறையில் வாக்குப்பதிவுகள் நடைபெறுவதாக மாநில தேர்தல் தலைமை தேர்தல் அதிகாரி பி.கே.போல் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், “தேர்தல் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. மக்கள் வாக்களிக்க வரும் ஆர்வத்தைப் பார்க்கும் போது அதிக அளவில் வாக்குப்பதிவாகும் என்று தோன்றுகிறது. 60 சதவீதம் வாக்குகள் பதிவாகலாம் என எதிர்பார்க்கிறோம். வாக்குப்பதிவு சுதந்திரமாகவும், அமைதியாகவும் நடந்து வருகிறது” என்று தெரிவித்துள்ளார்.

மக்களை வாக்களிக்க வருமாறு அழைப்பு விடுத்துள்ள மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “ஜம்மு காஷ்மீரில் உள்ள எனது சகோதர, சகோதரிகளே. முதல்கட்ட வாக்குப்பதிவு நடந்து வருகிறது. நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக ஒரு மாநிலத்தின் மாநில அந்தஸ்து பறிக்கப்பட்டு யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது. இது உங்களின் அனைத்து அரசியலமைப்பு உரிமைகளை மீறும் செயலாகும், ஜம்மு காஷ்மீருக்கான அவமானம் ஆகும். இண்டியா கூட்டணிக்காக நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்குகளும், உங்கள் உரிமைகளைத் திரும்பக் கொண்டு வரும், வேலை வாய்ப்பை வழங்கும், பெண்களை வலிமையாக்கும், அநீதியின் சகாப்தத்தில் இருந்து உங்களை வெளியே கொண்டுவரும், ஜம்மு காஷ்மீரை மீண்டும் செழிப்பாக்கும்” என்று தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### ராகுல்காந்திக்கு கொலை மிரட்டல் விடுத்த விவகாரம்

## ஒன்றிய அமைச்சர் ரவ்நீத் உள்பட 4 பேர் மீது வழக்கு!

### காங்கிரஸ் கட்சி சார்பில் காவல்நிலையத்தில் புகார்!

டெல்லி, செப்.20-

ராகுல்காந்திக்கு கொலை மிரட்டல் விடுத்த ஒன்றிய ரயில்வே இணையமைச்சர் ரவ்நீத் உட்பட 4 பேர் மீது டெல்லி துக்ளக் சாலையில் உள்ள காவல்நிலையத்தில் காங்கிரஸ் கட்சி புகார் அளித்துள்ளது.

மேலும் உத்தரப்பிரதேச மாநில அமைச்சர் ரகுராஜ் சிங் மற்றும் தர்விந்தர் சிங் மர்வா ஆகிய பா.ஜ.க. தலைவர்கள் மற்றும் மகாராஷ்டிரா முதலமைச்சர் ஏக்னாத் ஷிண்டே தரப்பு எம்.எல்.ஏ., சஞ்சய் கெய்க்வாட் உள்ளிட்டோர் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது.

ராகுல்காந்திக்கு கொலை மிரட்டல் விடுத்து, வெறுப்புணர்வை தூண்டும் வகையில் பேசிய இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

---

## ரூ.2,104 கோடி சந்திரயான்4 திட்டம்!

### ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்

புதுடெல்லி, செப்.20 -

ரூ.2,104 கோடி மதிப்பில் சந்திரயான்4 திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ரூ.1,236 கோடியில் 2028ல் வெள்ளி கிரகத்தில் ஆய்வு செய்வதற்கான செயற்கைக் கோளை அனுப்பும் திட்டத்துக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி வீரர்களை சந்திரனுக்கு அனுப்பும் திட்டத்தை சந்திரயான் 4 விண்கலம் மூலம் செயல்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.